திரு. எச்.ஜி. ஆறுமுகம் : தாண்டவன் என்பவர் விண்ணப்பத்தைக் கொடுத்தவுடன் நிலத்தில் செடிகளை நடவில்லை என்று சொல்லி மற்ற ஏழை எளியவர்கள் மீது வனத்துறை பதிவு செய்திருக்கிறார்கள். அந்தப் பதிவை நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : இதுபற்றிய தகவல்களை அரசு கவனத்திற்குக் கொண்டுவந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

உ. செம்பாகுறிச்சி அரிசனங்கள் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை அடைக்கப் பெற்றுள்ளது குறித்து.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்கு கொண்டு வருகிறேன்.

''சின்னசேலம் ஒன்றியத்தில் செம்பாகுறிச்சி ஊராட்சியில் வாழும் அரிசனங்களுக்கான சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையை, சாதி இந்துக்கள் வ்வசாயம் செய்ய பயன்படுத்துவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து''.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே. சின்னசேலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கிழக்கு கீழ்குப்பம் புறப்பகுதி காவல் நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் செம்பக்குறிச்சி கிராமம் உள்ளது. இக்கிராமத்திற்கு வடக்கே ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பொது புதைப்பிடம் ஒரு ஏக்கர் விஸ்தீரண நிலம் அரசு புறம் போக்கு ஆர். எஸ். எண். 26-1 என்ற நிலத்தில் உள்ளது. அரிசனங்கள், வள்ளுவப்பண்டாரம், மூப்பர்கள், படையாச்சிகள் உட்பட எல்லா ஜாதி மக்களும் அவரவர்களுக்கு என்று ஒதுக்கப் பட்ட குறிப்பிட்ட பகுதியில் பிணத்தைப் புதைப்பது வழக்கமாக இருந்து வருகிறது என்றாலும் இப்போது அப்பகுதியில் இதுவரை யாரும் விவசாயம் செய்யவில்லை. மேலும், அந்த இடுகாட்டிற்குச் செல்லும் வழிக்குப் பக்கத்தில் திரு. சந்திரகாச படையாச்சியின் மகன் திரு. பாலகிருஷ்ண படையாட்ச்சி என்பவர் 3 சென்ட் நிலத்தில் மிளகாய் செடி பயிரிட்டிருக்கிறார். பருவக்காலங்களில் மேலும் ஒரு சில ஜாதி இந்துக்களும் வழக்கமாக விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால், யாருடைய எதிர்ப்புமின்றி பிணங்கள் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப் படுகின்றன. விவசாயம் செய்வதால் பிணத்தை இடுகாட்டில்

1979 ஏப்ரல் 27]

புதைப்பதில் ஒருவித கஷ்டமும் இல்லை. இதுவரை அரிசனங்களுக்கும் இதர சாதியினருக்கும் எந்தவிதமான மனத்தாங்கலும் ஏற்படவில்லை. குறிப்பாக 13—1—1979 ஆம் தேதியன்று முருக பண்டாரம் மகன் சின்னத்தம்பி பண்டாரத்தின் பிணமும் யாதொரு தடங்கலுமின்றி அந்த இடுகாட்டில் புதைக்கப்பட்டது.

2, இருபது ஆண்டுகளுக்குமுன்பே அரசு மேற்படி இடுகாட்டிற்கு செல்லும் பாதைக்கு வேண்டிய நிலத்தை கையகப்படுத்த ஒப்புதல் அளித்தும் இடுகாட்டிற்குச் செல்ல சரியான பாதை அமைக்காததால் ஒரு நல்ல பாதை அமைக்கப்பட வேண்டும் என்பது எல்லோருடைய விருப்பமாகும். எனவே இச்செயற்குறிப்பு திட்டமாக செயல்படுத்தாமையால் இத்தருணத்திலாவது மேற்படி இடுகாட்டிற்குச் செல்லும் பாதையை சீரான அமைப்புடைய சாலையாக அமைக்கும் திட்டம் நிறைவேற வேண்டுமென தற்சமயம் அக்கிராமத்தில்உள்ள பெரும்பாலான மக்கள் தீர்மானித்துள்ளார்கள். இந்த விவகாரத்தால் கடந்த காலத்தில் எவ்வித பிரச்னையும் எழவில்லை. இதுகுறித்து காவல் நிலையத்திலும் புகார் ஏதுமில்லை. மேற்படி கிராமத்தில் அமைதியான சூழ்நிலையே உள்ளது என மாவட்ட ஆட்சியாளர் குறிப்பிட்டுள்ளார்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே பிறக்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கொடுக்க வேண்டுமென்று நாம் எல்லா மேடைகளிலே மார்தட்டி முழங்குகின்றோம். இந்த நிலையில் நாட்டிலே வாழமுடியாமல் அரிசன மக்கள் இறந்துவிட்டால் சுடுகாட்டிலே புதைப்பதற்குக்கூட வழியில்லாமல் இருக்கிறது என்பது எல்லாக் கட்சிகளும் வருத்தப்படக்கூடிய விஷயமாகும். இந்த அறிக்கையிலே 20 ஆண்டுகளுக்கு முன்பே பாதைக்கு வேண்டிய நிலத்தை கையகப்படுத்த ஒப்புதல் அளித்தும்கூட பாதை அமைக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 20 ஆண்டுக்காலமாக பாதை போடாமல் இருந்ததற்கு என்ன காரணம்? அரிசன மக்களைச் சம்பந்திகளாக ஆக்கிக்கொண்டவர்கள்கூட அந்தப் பாதையை அவ்வளவு காலமாகப் போடாமல் இருந்ததற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, 20 ஆண்டுகளுக்கு முன்பே, நிலத்தைக் கையகப்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு இருந்தும் ஏன் அந்தப் பாதை போடப்படவில்லை என்று காரணம் கேட்டார்கள். அந்தக் காரணத்தை அப்போது ஆண்டவர்களைத்தான் கேட்கவேண்டும்.

ஆனால் இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு அரசின் கவனத்திற்கு அது வந்த உடனே துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

ஊ. இராமநாதபுரம் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலையில் பால் வாங்கப்பெறுவது குறித்து.

திரு. த. இராமசாமி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

"இராமநாதபுரம் மாவட்டம், வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ள விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு பால் கொள்முதல் செய்வதால், அவர்கள் கடனைத் திருப்பித் தருவதில் உள்ள சிரமம் குறித்து,"

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பால் கொள்முதல் விலை வறட்சி காலத்தில் (Lean Season) எருமைப் பாலுக்கு ஒரு கிலோ கொழுப்புச்சத்துக்கு ரூ. 26-ம் பசும்பாலுக்கு —ஒரு கிலோ திரண்ட மொத்த சத்துக்கு ரூ. 12-ம் கொடுக்கப்படுகிறது. பால்பெருக்கு காலத்தில் (Flush Season) எருமைப்பாலுக்கு ரூ. 24-ம், பசும்பாலுக்கு ரூ. 11-ம் கொடுக்கப்படுகிறது. இதன்படி சராசரி 7 சதவிகிதம் கொழுப்புச் சத்துள்ள எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1·55-ம் 4 சதவிகிதம் கொழுப்புச்சத்தும் 8·5 சதவிகித கொழுப்பற்ற திண்மை பொருளும் உள்ள பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1·40-ம் கொடுக்கப்படுகிறது.

ஒரு கறவை மாட்டின் விலை ரூ. 2,500 (மானியம் ரூ. 1,000, கடன் ரூ. 1,500) ஒரு கலப்பின் பசு தனது 300 நாள் கறவையில் நாள் ஒன்றுக்கு 8 லிட்டர் வீதம் 2,400 லிட்டர் பாலும், முரா எருமை நாள் ஒன்றுக்கு 7 லிட்டர் வீதம் 2,100 லிட்டர் பாலும் கொடுக்கவல்லது. பசுவிற்கு கறவை மறப்பு காலம் 120 நாட்களும், எருமைக்கு 180 நாட்களும் ஆகும்.